# SRI LANKAN MUSLIMS' LULLABIES A CRITICAL VIEW

**M.A.Abdul Aabith**

Postgraduate Student of Tamil
Department of Languages, Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka

*abdhulaabith@gmail.com*

***ABSTRACT:*** *Lullabies play a major role in the sector of folk songs in folk literary types. It was visible that all the people who live in this world have a tradition of singing lullabies to make their babies to fall asleep. The village side Muslim women in Sri Lanka have been following this tradition throughout the history. According to that, this research becomes a critical view about folk lullabies of Sri Lankan Muslims. The main objective of this research is to reveal psychological thoughts that lie under these lullabies. Already recorded Sri Lankan Muslims' lullabies in the books were mainly used as the source data of this research. Moreover, psychological and social approaches were applied in this research. Finally, the psychological related thoughts that reflect in the Words of the lullabies and its messages were identified.*

**KEYWORDS:** Sri Lankan Muslims, Lullabies, Psychological thoughts, Folk songs.

## 1. அறிமுகம்

மானிடவியல், மொழியியல், சமூகவியல், உளவியல், வரலாறு, இலக்கியம் எனப் பல்துறைகளில் அகலித்து இயங்கும் ஒரு இயலாக நாட்டார் வழக்காற்றியல் அல்லது நாட்டுப்புறவியல் விளங்குகின்றது. நாட்டுப்புறவியல் குறித்து விளக்கமளிக்கும் சு. சண்முகசுந்தரம் அவர்கள் பின்வரும் கருத்தை முன்வைக்கின்றார்:

"நாட்டுப்புற இயல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புகள் (Traditional Creations) எனலாம். இவ்வியலுக்குள் இலக்கியம், கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றவை அடங்கும். நாட்டுப்புற இலக்கியத்தைப் பாடல், கதை, கதைப்பாடல், விடுகதை, பழமொழி என்று ஐந்து வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்." (சண்முகசுந்தரம், 2003:9)

இவருடைய கருத்தின்படி, நாட்டுப்புற இயலில் நாட்டுப்புற இலக்கியம் என்பது பாடல், கதை, கதைப்பாடல், விடுகதை, பழமொழி போன்ற இலக்கிய வகைமைகளை உள்ளடக்கிய பெரும் பிரிவுகளுள் ஒன்றாக நோக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. இது வாய்மொழி இலக்கியம், பொதுமக்கள் இலக்கியம், நாட்டார் இலக்கியம் எனப் பல பெயர்களால் ஆய்வாளர்கள் மத்தியில் வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டுப்புற இலக்கியங்களினுள் நாட்டுப்புறப் பாடல்கள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இவற்றுள் தாலாட்டுப் பாடல்கள் முதன்மையிடத்தில் வைத்து நோக்கப்படுகின்றன. பிறப்பு முதல், சில காலத்திற்கு குழந்தைக்கு அவசியமான தாயின் அரவணைப்புடன் தொடர்புபட்ட ஒரு நிகழ்த்துகையாக தாலாட்டு அமைந்திருப்பதும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். தாயிடமிருந்து குழந்தைக்கு முதல் அறிவு கிடைக்கின்றது என்பதற்கும், இதனூடாகப் பெண்ணை ஆணுக்கு முந்திய ஓர் அறிவாளியாக நோக்க முடியும் என்பதற்கும் தாலாட்டுப்பாடல்கள் சிறந்த சான்றாக அமைகின்றன.

வாய்மொழி இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் ஆரம்பித்த காலம் முதல், அவை பன்முக நோக்கில் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு பல்வேறுபட்ட உரையாடல்கள் நிகழ்த்தப்பட்டே வந்துள்ளன. உளவியல் அணுகுமுறை திறனாய்வாளர்கள் மத்தியில் குறித்த இலக்கியங்கள் மீதான புதிய வாசிப்பு தொடர்பில் விஷேட கவனித்தலைப் பெற்று விளங்குகின்றது. அதிலும் தாலாட்டுப் பாடல்கள் தாயின் மனவெளிப்பாடுகளாகவும், குழந்தைக்கான அரவணைப்பு சார்ந்த உளவியல் தேவையாகவும் அமைந்திருப்பதால், அவை இவ்வணுகுமுறையில் விஷேடமாக ஆராயப்பட்டு வருகின்றன. தமிழக ஆய்வாளர் சு.சண்முகசுந்தரம் அவர்கள் "குழந்தைப் பருவத்தில் தாய் பாடும் தாலாட்டில் இசை உறக்கத்திற்குப் பயன்படுவது போலவே இயல் உள்ளத்திற்குப் பயன்படும்" (1991:8) எனக் குறிப்பிடுவதும் இங்கு கவனத்திற்குரியதாகும்.

தாலாட்டுப் பாடல்களை உளவியல் நோக்கில் ஆராயும் போது, அங்கு தாய் மற்றும் குழந்தை சார்ந்த உளவியல் கருத்தாக்கங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. அதிலும் தாயின் மனவெளிப்பாடுகள் சார்ந்து ஆராய்தலே அதிக கவனத்திற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில், இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படும் உளவியல் கருத்தாக்கங்கள் குறித்து ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

## 2. ஆய்வின் நோக்கங்கள்

- இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படும் உளவியல் கருத்தாக்கங்களை வெளிக்கொணர்தல்.
- தாயின் மன எண்ணங்கள் மற்றும் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலான பாடலில் இடம்பெறும் சொற்றொடர்களை வெளிக்கொணர்தல்.
- தாயின் மன எண்ணங்கள் மற்றும் உணர்வு வெளிப்பாடுகளோடு தொடர்பான சமூகப் பிரச்சினைகளை இனங்காணல்.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விலே பிரதானமாக உளவியல் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, பாடல்களில் இடம்பெறக்கூடிய வர்ணனைகள், உள்ளடக்கச் செய்திகள் மற்றும் பல்வேறு சொற்றொடர்கள் போன்றன தாயின் உள்ளத்து உணர்வுப் பிரதிபலிப்புக்களாக நோக்கப்பட்டுள்ளன. தாலாட்டுப் பாடல்களினால் குழந்தையின் நடத்தையில் ஏற்படும் விளைவுகள் பற்றிய கருத்தாக்கங்களும் அங்காங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளன. தாயின் உளநிலையில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள் குறித்து கருத்தாடல்களை மேற்கொள்ள, சில இடங்களில் சமூகவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

## 4. இலக்கிய மீளாய்வு

நாட்டார் இலக்கிய ஆய்வுகள் இடம்பெற ஆரம்பித்த காலம் முதல் பல ஆய்வாளர்கள் உளவியல் நோக்கில் தாலாட்டுப்பாடல்களை அணுகி ஆராய்ந்துள்ளனர். அந்த வகையில், சு.சண்முக சுந்தரம் அவர்கள் தனது நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை (1991) என்ற நூலில் தாலாட்டுப்பாடல்களை குழந்தை உளவியல், கல்வி உளவியல், சமூக உளவியல் எனப் பல பரிமாணங்களில் அணுகி ஆராய்ந்துள்ளார். அதே போன்று வ.விஜயலட்சுமி 'உளவியல் நோக்கில் நாட்டுப்புறப் பாடல்கள்' (2005) என்ற நூலில் 'தாலாட்டுப் பாடல்களில் உளவியல்' என்ற இயலில் தாலாட்டுப் பாடல்களின் வடிவம் மற்றும் உள்ளடக்கத்தை ஆதாரமாகக் கொண்டு, உளவியல் மற்றும் சமூக உளவியல் கருத்தாக்கங்களை வெளிக்கொணர்ந்து விரிவாக உரையாடியுள்ளார். இந்நூல்களில்

தாலாட்டுப்பாடல்களில் வெளிப்படும் உளவியல் சிந்தனைகள் குறித்து ஆராயப்பட்டிருந்தாலும், அவை தமிழக சூழலில் வழங்கி வரும் தாலாட்டுப் பாடல்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றவையாகும். ஈழத்துச் சூழலில் வழங்கி வரும் தாலாட்டுப்பாடல்களில் உளவியல் கருத்தாக்கங்கள் குறித்து விரிவான தளத்தில் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் இடம்பெறாத சூழலில் இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5. கலந்துரையாடலும் முடிவுகளும்**

கிராமிய மக்களின் உள்ளங்களோடு நெருக்கமான உறவு கொண்ட தாலாட்டுப் பாடல்கள் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுள் தனித்துவம் மிக்கதாய் மிளிர்கின்றன. தான் வயிற்றில் சுமந்து, ஈன்றெடுத்த குழந்தை அழும் போது, அவ்வழுகையினை நிறுத்தி, அமைதிப்படுத்தி உறங்கவைக்கும் கலை, தாய்மையுணர்வின் இயற்கை வெளிப்பாடாகும். அவ்வேளை குழந்தையின் உலகோடு தாய் சங்கமித்துவிடுவாள். அவள் குழந்தையைத் தோளிலோ, மடியிலோ, கைகளிலோ ஏந்திய படி, அல்லது தொட்டிலில் வைத்து பாடல்களைப் பாட ஆரம்பிப்பாள். பாடலைக் கேட்கும் குழந்தையோ, படிப்படியாக அயர்ந்து உறங்க ஆரம்பிக்க, தாயின் குரலும் படிப்படியாகத் தளர்ந்து கொண்டே செல்லும்.

'தாலாட்டு' என்ற சொல் 'தால்', 'ஆட்டு' ஆகிய இரு சொற்களின் கோர்வையாகும். 'தால்' என்பதற்கு 'நாக்கு' என்று அர்த்தம். குழந்தையை உறங்க வைக்கத் தாய் தனது நாவினை அசைத்துப் பாடல்கள் பாடுவதால், தாலாட்டு என மரபு வழியாகக் கூறப்பட்டு வருகின்றது. "தால் என்பதற்கு தொட்டில் என்றும் பொருளுண்டு. தொட்டிலை ஆட்டிப்பாடும் தொட்டில் பாட்டும் தாலாட்டு என்று பெயர் பெற்றிருக்க வேண்டும்." (சண்முகசுந்தரம், 2003:52) உள்ளூர் மொழி வழக்கில் இது 'தாராட்டு', 'ஓலாட்டு', 'ஆராட்டு', 'ஓராட்டு' என வழங்கப்படுகின்றது.

"தாலாட்டிற்குக் கருப்பொருள் வேண்டுமென்று தாய் அலைய வேண்டிய அவசியம் இல்லை. குழந்தைப் பேற்றுக்காக அவள் ஏங்கி நின்ற போது, நெஞ்சிலே தோன்றிய அற்புதக் கனவுகள், அதன் பின்னர், பரிசு கொண்டு வந்த உடன்பிறந்தாரின் தாராளத் தன்மை, குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்கும் கணவனுடைய புகழ், தான் சார்ந்திருக்கும் மார்க்கத்தின் உண்மைத்தன்மை, குழந்தையின் மேனியழகு, அது தூங்கும் தொட்டிலின் சிறப்பு எல்லாம் அவள் தாலாட்டின் கருவியாய் அல்லது பாட்டாய் உருப்பெற்று கட்டியம் கூறிக்கொண்டு வருகின்றன." (மஜீத், 2007:174)

பொதுவாகத் தாய்மார் தங்களது குழந்தைகளுக்காகத் தாலாட்டுப் பாடுவது, குழந்தையின் பின்னைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மொழிசார்ந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு உதவியாக அமையும். இது அவர்களின் எதிர்காலக் கல்வி சார் வெற்றிக்கும், மனவெழுச்சி சார் நல்லிருப்புக்கும் மிக அவசியமான ஒன்றாகும்.

"பேச்சின் ஒரு வடிவமே பாடலாகும். ஒவ்வொரு பண்பாட்டிலும் உள்ள தாலாட்டுப் பாடல்கள் மற்றும் பாலர் பாடல்கள் ஆகியன தாய்மொழியின் தனித்துவமான ஓசை நயம் மற்றும் வித்தியாசமான சொல்லமைப்பு ஆகியவற்றைக் குழந்தைகளிடம் எடுத்துச் செல்வதோடு, அவர்களின் செவிப்புலன், குரல் மற்றும் மூளை ஆகியவற்றை மொழிக்காகத் தயார் செய்கின்றது. Sally Goddard Blythe தனது 'The Genious of Natural childhood' என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்." singing to children may help development of language skills (Amelia Hill.2011)

இவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் தாலாட்டுப் பாடும் மரபு இலங்கையின் கிராமப்புற முஸ்லிம் பெண்கள் மத்தியிலே பரவலாகப் பேணப்பட்டு வந்துள்ளது. குழந்தை வளர்ப்பிலே உள்ள முக்கியமான அங்கமாக அவர்கள் தாலாட்டுப் பாடுவதைக் கருதினர். அவ்வாறு பாடப்பட்ட பாடல்களிலே, கற்பனையழகும் சொல்லழகும் மாத்திரமன்றி, பல்வேறுபட்ட உளவியல் சிந்தனைகளும் வெளிப்பட்டு நிற்கின்றன. அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

**1. குழந்தை பற்றிய வர்ணனை**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயல்பாகவே புதைந்து கிடக்கும் சில ஊக்கிகள் அவனை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்கு, ஒரு குறிப்பிட்ட விதமாக எழுச்சி அடையவும், துலங்கவும் வைக்கின்றன. புதைந்து கிடக்கும் ஊக்கிகளே இயல்பூக்கங்கள் (instincts) எனப்படும். மெக்டூகல் பதிநான்கு வகையான இயல்பூக்கங்களையும், அவற்றோடு இணைந்த உணர்ச்சிகளையும் அடையாளப்படுத்தியுள்ளார். (விஜயலட்சுமி, 2005:20) அவற்றுள் தாய்மை என்ற இயல்பூக்கமும் (Parental Instinct – Maternal Instinct), அதன் வழியாக எழும் பாசம் எனும் மனவெழுச்சியும் தாலாட்டுப் பாடல்களில் இடம்பெறும் தாயினுடைய குழந்தை பற்றிய வர்ணனைகளுக்குக் காரணமாகக் கொள்ள முடியும்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வழங்கி வரும் தலாட்டுப் பாடல்களில் குழந்தை பற்றிய தாயின் வர்ணனைகள் அதிகம் இடம் பெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. குழந்தைப் பேற்றுக்காக அவள் கொண்ட ஏக்கம், தவிப்பு, கருவுற்ற காலத்தில் அவள் கண்ட கனவுகள், பிரசவத்தின் போது அனுபவித்த வலி எனப் பல காரணங்கள் அவள் குழந்தையின் மீது காட்டும் அதீத பாசத்துக்குப் பின்னால் உள்ளன. எனவேதான், தாலாட்டுப் பாடல்களில் இடம்பெறும் குழந்தை பற்றிய வர்ணிப்புக்கான தாயின் கற்பனை எல்லை மட்டுப்படுத்தப்படாமல் அகலித்துச் செல்கிறது.

தான் பார்க்கும் உலகம் குழந்தைதான் என்பதை வெளிப்படுத்தும் வகையில் பார்வை உறுப்புக்களான கண், கண்மணி போன்றவற்றோடு குழந்தையை அவள் வர்ணிக்கிறாள்.

“ பெத்தெடுத்த கண்மணியே
பேர் வழங்க நீ வளராய்
ஆராரோ ஆரிவரோ…” (மஜீத், 2007:184)

“ கண்ணே உறங்காயோ
கண்மணியே நித்திரை செய்
ஓராரோ….”

(மஜீத், 2007:187)

சங்கு, சமுத்திரம் மாத்திரமல்ல, கிடைப்பதற்கரிய பெறுமதி மிக்க முத்து, மாணிக்கம், மரகதம், இரத்தினம் ஆகியனவும் அவளது வர்ணித்தலுக்கான கற்பனைக்குள் நெளிகின்றன. குழந்தையை முத்தாக வர்ணித்தவள் அதன் ஒளியாகவும் வர்ணிக்கின்றாள்.

“சங்கே சமுத்திரமே
சமுத்திரத்தின் ஆசை முத்தே..” (மஜீத், 2007:184)

''மாணிக்க முத்தே
மரகதமே ரெத்தினமே..'' (மஜீத், 2007:188)

''முத்தான முத்தொளியோ முதலான ஆணிமுத்தோ
ஆணிமுத்து மாணிக்கமே அல்லாஹ் தந்த புத்திரனே'' (ஜெமீல், 2008:43)

குழந்தையின் வாயின் அழகைப் பாட நினைத்த அவள்,

''கோவிச்சளாதே கண்ணே – ஒண்ட
கொவ்வைக் கனி வாய் நோவ…'' (2007:187)

''முத்துப் போல் நீர் வடிய மோதிர வாயும் நோவ
கத்திக்கதறாதே காலம நாம போய்ப் பார்ப்போம்'' (ஜெமீல், 2008:38)

எனத் தனக்குப் பிடித்த கொவ்வைப் பழத்தோடும், மோதிரத்தோடும் ஒப்பிடுகிறாள். அத்தோடு அவளது கற்பனையெல்லை நிறைவுறவில்லை. கிளி, மயில், வண்டு, குயில், புலி என சூழலில் வாழும் ஏனைய உயிரினங்களைத் தேடி காடு, சோலையெல்லாம் அலைகின்றது.

''பாலும் அடுப்பினிலே
எண்ட சோலைக்கிளி கையினிலே..'' (மஜீத், 2007:184)

''கண்ணாட்டி கண்ணுறங்கு
கான மயிலே நீயுறங்கு…'' (மஜீத், 2007:187)

''வண்டுப் புலியுறங்கு வனக்குயிலே நீயுறங்கு
சேடியிற் புலியுறங்கு செல்ல மகன் கண்ணுறங்கு'' (மஜீத், 2007:43)

இத்தகைய வர்ணிப்புக்களினூடாக தாய் குழந்தை மீது கொண்ட அளிவல்லாத அன்பினையும் அவளது முழு உலகமும் குழந்தைதான் என்பதையும் வெளிப்படுத்துகிறாள். இவையெல்லாம் தாய்மை எனும் இயல்பூக்கத்தால் எழுந்த பாசம் எனும் மனவெழுச்சி காரணமாக நிகழ்ந்தவையாகும்.

**2. உறவுகள் பற்றிய செய்திகள்**

குழந்தையைத் தாலாட்டும் தாய் குழந்தையையும் தன்னையும் ஆதரிக்க வேண்டிய, தனக்கு நெருக்கமான உறவுகள் பற்றிப் பாடுகிறாள். அவ்வாறு பாடும்போது, அதைக் கேட்கும் குறித்த உறவுகள் மனங்களில் இருவருக்குமான இடம் கிடைத்துவிடுகின்றது. அதே சமயம் குழந்தை மனதிலும் அவ்வுறவுகள் மீதான அன்பும், மரியாதையும் ஏற்படுகின்றது.

தாலாட்டுப் பாடும்போது, தாய் தனக்கு நெருக்கமான உறவுகளைப் பாடுவதில் சமூகக் காரணி ஒன்றும் உண்டு. அன்றைய தந்தை வழிச் சமூக அமைப்பில், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படாத சூழலில், அவள் தனக்கும் தனது குழந்தைக்குமான உணவு, உடை போன்ற பொருளாதாரத் தேவைக்காக தான் சார்ந்த ஆணுறவுகளையே

அதிகம் நம்பியிருக்கவேண்டியிருந்தது. எனவேதான், தனக்கு நெருக்கமான உறவுகளின் தொடர்பின் நீட்சிக்காக அவள் தாலாட்டில் அவர்களைப் பாடுகிறாள்.

தாயை அடுத்து குழந்தைக்குத் தேவைப்படும் முக்கியமான ஆதரவு தந்தையாகும். குடும்பத்திற்காக உழைக்க அவர் வெளியில் அதிக நேரம் செலவிட்டாலும் தந்தையின் அரவணைப்பு குழந்தைக்கு அவசியம் என்பதை உணர்ந்த தாய், பின்வருமாறு பாடுகிறாள்:

“வாப்பா இருந்தக்கால்
வாரி உன்னைத் தோளில் வைத்து
பூப்போல உலாவிடுவார்
பொறிதியுடன் கண்வளராய்
ஆராரோ ஆரிவரோ…” (மஜீத், 2007:184)

“தாயார் கிளியோ
தகப்பனார் வங்கிசமோ
பெற்றாள் ஒருத்தி
பெயரிட்டார் ஆயிரம்பேர்..” (மஜீத், 2007:187)

குழந்தையின் அழுகைக்கான காரணத்தைப் பற்றிச் சிந்தித்த தாயின் மனவலைகளுக்குள் தந்தை பெறும் முக்கியத்துவத்தை இப்பாடல்களில் காணலாம்.

குழந்தையின் தந்தையை அடுத்து, தனக்கு நெருக்கமான உறவுகளான அண்ணன், மச்சான் ஆகியோர் தாலாட்டுப் பாடல்களுள் அழைத்து வரப்படுகின்றனர். குழந்தைக்கு மாமன் முறையான தனது அண்ணன், குழந்தை மண்ணால் சோறு சமைத்து விளையாடுவதற்கு மண்சட்டி வாங்கி வரக் கொழும்புக்குப் போயிருப்பதாகக் கூறித் தாலாட்டுகிறாள்.

“மண்ணாலே சோறாக்க
மண்சட்டிப் பானைதனை
கொண்டாறன் என்று
காக்கா கொழும்புக்குப் போனாராம்
ஆராரோ…ஆரிவரோ…” (மஜீத், 2007:185)

மற்றுமொரு பாடலில் முந்திரிக் குலை, பப்பாளி, அப்பிள் ஆகிய கிடைத்தற்கரிய பழங்களையும் தனது குழந்தைக்காக தனது அண்ணன் வாங்கி வருவதாகப் பாடுகிறாள்.

“பச்சை முந்திரிக் குலையும்
பப்பாளிக்கா அப்பிளீசும்
பிச்சி வரப் போன காக்கா
பின்னேரம் வந்திடுவார்
ஆராரோ…. ஆரிவரோ….”(மஜீத், 2007:185)

தனது மச்சானிடம் (குழந்தையின் சித்தப்பாவிடம்) காய்கறி வாங்கிக் கொண்டு வரும் போது, குழந்தைக்காக மிட்டாயும் வாங்கி வருமாறு கூறுவதாகப் பின்வரும் பாடல் வரி அமைந்துள்ளது:

“கட்டமச்சான் நெட்டமச்சான் காய் கறி கொண்டாறமச்சான்

பொட்டிதனில் முட்டாயும் போட்டுட்டு வா சின்ன மச்சான்..” (ஜெமீல், 2008:38)

**3. குழந்தைக்காக ஏங்கியதும் காணிக்கை நேர்ந்ததும்.**

குடும்ப வாழ்வில் இணையும் ஆணும் பெண்ணும் தாம்பத்திய உறவின் மூலம், குழந்தையொன்றினை எதிர்பார்ப்பது இயற்கையானது. ஆயினும் குழந்தைப் பேற்றினை ஒரு சமூக மதிப்பீட்டின் அடையாளமாக அன்றைய சமூக அமைப்பு அணுகியுள்ளது. ஒப்பீட்டளவில் பெண்கள் மீதான கட்டுப்பாடுகளும், அதிகார வன்முறைகளும் நிறைந்திருந்த அச்சமூக அமைப்பில், குறிப்பிட்ட கால எல்லையினுள் கருவுறாத பெண்கள் ‘மலடி’ எனப் பழிதூற்றப்படும் அல்லது புறக்கணிக்கப்படும் நிலையினை எதிர்நோக்கியுள்ளனர். இதனைப் பின்வரும் பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

“மற்றவர்கள் உன் தாயை
மலடியென்று ஏசாமல்
பெத்தெடுத்த கண்மணியே
பேர் வழங்க நீ வளராய்
ஆராரோ ஆரிவரோ….” (மஜீத், 2007:ப.183)

“மத்தவர்கள் உன்தாயை மலடி என்று தள்ளாமல்
பெத்தெடுத்த கண்மணியே பேர் விளங்க நீ வளராய்…” (ஜெமீல், 2008:38)

இவ்வாறான தருணங்களில் அவள் அனுபவிக்கும் மனவேதனைகள் சொல்லிமாள முடியாதவை. கணவனிடத்தில் உடலியில் சார் பிரச்சினைகள் இருந்தாலும், அவை சமூக வெளிக்கு வருவதில்லை. இத்தகைய பெண்கள் சார்ந்து இடம்பெறும் புறக்கணிப்புக்கள் பற்றிய அனுபவங்கள், பெண்கள் மத்தியிலே சமூக மனவடுவினை ஏற்பத்தியிருந்தது.

இதனை நாம் உளவியலில் இடம்பெறும் விரக்திநிலை பற்றிய எண்ணக்கருவுடனும் (Frustration) தொடர்புபடுத்தி நோக்கலாம். அடிப்படைத் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதிலும், சில முக்கியமான இலக்குகளை அடைந்து கொள்வதிலும் சமூகக் காரணிகள் தடைகளை ஏற்படுத்தி, தனிநபர்களை விரக்கதிநிலைக்கு இட்டுச் செல்வதாக எஸ்.கே.மங்கல் தனது ‘abnormal Psychology’ (2008:39) எனும் நூலில் குறிப்பிடுகிறார். இதன்படி, குழந்தைப் பேறில்லாத பெண்களை ‘மலடி’ என விளிம்பு நிலையில் வைத்து நோக்குவது, அத்தகைய பெண்களுக்கு விரக்தி மனநிலையைத் தோற்றுவிக்கும் செயற்பாடாக அடையாளப்படுத்த முடியும். விரக்தியுற்ற பெண்களோ, தமது உள்ளத்தைத் திடப்படுத்த ஆன்மீகப் பரிகாரத்தை நோக்கிப் பயணிக்கின்றனர். இறைநேசர்களின் சந்நிதானத்தில் காணிக்கையிட்டு, குழந்தை வேண்டி நோன்பு நோற்கின்றனர். குழந்தை பிறந்தததும் அவர்கள் தாம் வைத்திருந்த ஆன்மீக நம்பிக்கைகளில் திருப்தியும், ஆறுதலும் அடைகின்றனர்.

அந்த வகையில், தாலாட்டுப் பாடல்களில் தாய் குழந்தையில்லாமல் தவித்தது, காணிக்கை நேர்ந்தது என்பன தாயின் மனவெளிப்பாடுகளாக அமைகின்றன. இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெண்களிடையே குழந்தைப் பேற்றுக்காக இறைசேர் சந்நிதானங்களில் காணிக்கை செய்யும் வழக்கம் இருந்துள்ளதைப் பின்வரும் பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

“காணிக்கை நேர்ந்தேன்
கைக்குழந்தை வேணுமென்று

பக்கீர் பிச்சை இவனை
ஆளாக்கித் தாருமல்லாஹ்…” (மஜீத், 2007:188)

குறிப்பாகத் தென்கிழக்கு வாழ் முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரை, அவர்கள் குழந்தைப் பேற்றுக்காக மல்கம்பிட்டி எனும் பிரதேசத்தில் அமைந்துள்ள ‘கலந்தர்’ எனும் இறைநேசருக்கு காணிக்கை செய்து வந்துள்ளதை இனங்காண முடிகிறது.

“காணிக்கைச் செம்பே – மகனே நீ
கலந்தரப்பா கைப்பொருளே
மாணிக்க முத்தே
மரகதமே ரெத்தினமே..” (மஜீத், 2007:187)

தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படும் இத்தகைய பெண்களின் குழந்தைப் பேற்றை வேண்டி மேற்கொள்ளப்படும் ஆன்மீகக் கருமங்கள் பற்றிய செய்திகள், அன்றைய சூழலில் பெண்கள் எதிர்கொண்ட உளவியல் பிரச்சினைகளையும், சமூகத்தில் காணப்பட்ட பிற்போக்கு நிலையினையும் நினைவுபடுத்துகின்றன. இன்னுமொரு வகையில் இப்பாடல் வரிகளினூடாக, தாயின் மனப்பாரம் குறைவதற்கான வழியாகவும் இருந்திருக்க முடியும்.

**4. அழுகைக்கான காரணம் வினவல்**

குழந்தையின் அழுகைக்குப் பல காரணங்கள் உள்ளன. பசியை உணர்தல், கழிவுகள் வெளியேறல் போன்றன அவற்றுள் இலகுவாக அடையாளங்காணப்பட்டு நிவர்த்தி செய்யப்படக்கூடியவையாகும். ஆயினும், எளிதில் இனங்கண்டு கொள்ள முடியாத சில காரணங்களும் குழந்தையின் அழுகைக்குப் பின்னால் இருக்கின்றன. ஏதாவது ஒன்றைக் கண்டு பயத்தை உணரும் போதும் குழந்தை அழும். தாயோ, தந்தையோ தனக்கு அருகில் இல்லை என்பதை உணரும் போதும் அழும். திடுக்கிடும் கனவுகள் வெளிப்படும் போதும் குழந்தை அழுவதுண்டு. இத்தகைய காரணங்களால் உண்டாகும் குழந்தையின் அழுகையும் சற்று நேரம் நீடித்திருப்பதைக் காணலாம். தாயும் அதன் அழுகையை நிறுத்தப் பல முயற்சிகளில் ஈடுபடுவாள். இத்தகைய சூழ்நிலையொன்றை எதிர்கொண்ட தாய், பின்வருமாறு பாடுகிறாள்:

“மாமி அடித்தாளோ
மருதோண்டிக் கொப்பாலே
சாச்சி அடித்தாரோ
சாயப் பிரம்பாலே
ஆராரோ….ஆரிவரோ…”(மஜீத், 2007:185)

“மாமி அடித்தாளோ மருதோண்டிக் கொப்பாலே
தேமி அழுகாமல் சீதேவி நித்திரை செய்

சாச்சா அடித்தாரோ சாயப் பெரம்பாலே
பூச்சிகள் குத்தினாப் போல் புலம்பாதே நித்திரை செய்……” (ஜெமீல், 2008:38)

இப்பாடல் வரிகளிலே குழந்தையின் அழுகைக்கான காரணங்களை அறிய முடியாத தாய், ஒவ்வொரு வகைக் காரணங்களையும் வினாவாக முன்வைத்து, பரிவுடன் (Sympathy) குழந்தையை ஆற்றுப்படுத்துவதைக் காணமுடிகிறது.

**5. தொட்டில், கட்டில், மெத்தை பற்றிய வர்ணனை**

தாலாட்டுப் பாடும் செயன்முறையில் குழந்தை உறங்குவதற்கான தொட்டில் கட்டும் நடைமுறை முக்கியமான ஒரு அம்சமாகும். கிராமிய மக்களிடையே தாயின் புடவையைக் கொண்டு குழந்தைக்குத் தொட்டில் கட்டும் வழக்கம் தொன்று தொட்டுப் பரவலாக இருந்து வந்துள்ளது. புடவைக்குள் உறங்கும் குழந்தையோ தாய் தன்னோடு அல்லது தனக்கு அருகாமையில் இருப்பதாக உணரும். இருப்பினும், இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களில் புடவையினால் தொட்டில் கட்டப்பட்டதான செய்திகள் இடம்பெற்றதாக இல்லை. மாறாக, விலையுயர்ந்த மற்றும் உயர் ரகத் தொட்டில்களில் குழந்தையை வைத்துத் தாலாட்டுவதாக அவை அமைந்துள்ளதைக் காண முடிகிறது. அந்த வகையில், தென்கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்து வந்த தாலாட்டுப் பாடலொன்றில், கட்டில், தொட்டில், மெத்தை பற்றிய வர்ணனைகளோடு பின்வரும் பாடல் இடம்பெறுவதைக் காணலாம்:

''பஞ்சவர்ணக் கட்டிலிலே
பாலமுதத் தொட்டிலிலே
அஞ்செழுத்து மெத்தையிலே – என்ர
அருமை மகள் நித்திரை செய்..'' (மஜீத், 2007:175)

மன்னார் பிரதேசத்தில் வழங்கி வந்த மற்றுமொரு தாலாட்டுப் பாடலில் வலிமையான இலுப்பை மரத்தை வெட்டி, அதில் முத்துக்கள் கோர்க்கப்பட்ட கயிற்றைக் கொண்டு, பொன்னால் செய்யப்பட்ட பெட்டியினைத் தொடுத்து, அதில் குழந்தையை வைத்துத் தாலாட்ட விரும்பும் தாயின் அவா வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

''பச்சை இலுப்பை வெட்டி பால்வடியத் தொட்டில் கட்டி
பொட்டியும் பொன்னாலே தொடுகயிறும் முத்தாலே..'' (ஜெமீல், 2008:43)

கஷ்டங்கள் நிறைந்த வாழ்க்கை முறையை எதிர்கொள்ளும்போது அல்லது மகிழ்ச்சியை உணர முடியாத சூழ்நிலையில் குறித்த யதார்த்தத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகப் பலர் பகற்கனவு காண்பதுண்டு. கனவிலே அவர்கள் தாம் எதிர்பார்க்கும் வாழ்க்கையினை அமைத்துக்கொள்வர். உளவியல் அறிஞர் சிக்மன் புறொய்டின் கருத்துப்படி, பகற்கனவு காண்பது உளவியல் தற்காப்புப் பொறிமுறைளுள் (Ego Defense Mechanism) ஒன்றாக நோக்கப்படுகின்றது. அந்த வகையில், மேற்படிப் பாடல்களில் இடம்பெறும் குழந்தை உறங்கும் தொட்டில், கட்டில், மெத்தை பற்றிய வர்ணனை, தமக்கிருந்த நிகழ்கால வறுமையினை மறக்க, தாய்மார் காணும் பகற்கனவாகக் (Phantasy) கொள்ள முடியும். புடவை பற்றிய செய்திகள் இடம்பெறாமைக்கான காரணமாகவும் இதனைக் கொள்ள முடியும்.

**6. குழந்தையின் எதிர்காலம் பற்றிய தாயின் எதிர்பார்ப்பு**

மனித நடத்தைகளை வழிநடாத்துவதில் எதிர்பார்ப்புக்கள் முக்கிய பங்காற்றுகின்றன. நம்பிக்கையுடன் தொடர்புபட்ட இவை அனுபவம், அறிகைச் செயல்முறைகள் மற்றும் கலாச்சார விழுமியங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. மனிதர்கள் எண்ணற்ற விடயங்கள் குறித்து பரந்தளவிலான எதிர்பார்ப்புக்களை தங்களுக்குள் விருத்தி செய்து கொள்கின்றனர்.

தாலாட்டுப் பாடல்களில் பல இடங்களில் குழந்தையின் எதிர்காலம் பற்றிய தாயின் எதிர்பார்ப்புக்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. குறிப்பாக, பாடல்களில் இடம்பெறும்

குழந்தைக்கான பிரார்த்தனைகள் அனைத்துமே குழந்தையின் எதிர்காலம் பற்றிய தாயின் எதிர்பார்ப்பாகவே அமைகின்றன.

தான் நேர்ச்சை செய்து தவமிருந்து பெற்ற குழந்தை நல்ல முறையில் தீங்குகள் இன்றியும், இம்மையிலும் மறுமையிலும் பயனளிக்கும் வகையிலும் வளர்வதற்கு இறைவனிடம் உதவி தேடுவதாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன.

''பக்கீர் பிச்சை இவனை
ஆளாக்கித் தாருமல்லா
முந்தானைப் பிச்சை இவனை
முதலாக்கித் தாருமல்லாஹ்..'' (மஜீத், 2007:188)

மேலும், தனது குழந்தை உண்மைக்குப் பாத்திரமான ஒரு மனிதராக வளரவேண்டும் என எதிர்பார்க்கும் அவள்,

''நாஊறும் இல்லாம இவனை
நாடி வளர் அல்லாவே…'' (மஜீத், 2007:188)

எனப் பிரார்த்தனை புரிகிறாள். மற்றுமொரு பாடலில் ,

''சீராய் உலகம் படைத்தோனின்
சிறப்பான அல்லாஹ் எனும் நாமம்
நேராய்க் கல்பில் வைத்தே
நினைவாய் உறங்கு மகனே
ஆராரோ…. ஆரிவரோ…..'' (மஜீத், 2007:185)

என அல்லாஹ் பற்றிய ஆழமான நம்பிக்கையை உள்ளத்திலே விதைக்க முனைகிறாள். இதனூடாக, எந்நிலையிலும் இறைவனை மறவாத ஒருவானாகத் தனது குழந்தை வளரவேண்டும் என எதிர்பார்க்கிறாள். இறைவனில் மாத்திரமன்றி, அவனது மலக்குகள் (வானவர்கள்), வேதங்கள், தூதர்கள், மறுமை நாள் மற்றும் இறை நியதி ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டவனாகவும், இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகளான கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு மற்றும் ஹஜ் ஆகிய கடமைகளை நிறைவேற்றக் கூடியவனாகவும் இருக்கவேண்டும் என அவள் எதிர்பார்க்கிறாள். எனவேதான்,

''ஈமானுடனே கலிமாவை
ஓதித் தொழுது முதலீந்து
சீமான் தனக்காய் நோன்பு வைத்து
ஹஜ்ஜூம் செய்வாய் என் மகனே..'' (ஜெமீல், 2008:37)

எனப் பாடுகிறாள். இதே போன்று மற்றுமொரு தாலாட்டில் தாயொருத்தி,

''முத்துக் கலிமாவை
மௌனத் தியானம் செய்து
நெத்தியின் மத்திதனில்
நிலை நிறுத்தி நித்திரை செய்….'' (ஜெமீல்,2008:35)

எனப் பாடுகிறாள்.

இவ்வாறு தங்களது குழந்தைகள் மார்க்கப்பற்றுள்ள, ஒழுக்கமான, ஈருலகிலும் நன்மை பயக்கும் சிறந்த மனிதராக வரவேண்டும் எனும் குழந்தையின் எதிர்காலம் பற்றிய தாய்மாரின் எதிர்பார்க்கை தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

பெற்றோர்கள் குழந்தைகளுடைய எதிர்காலம் தொடர்பில் தவறான எதிர்பார்ப்புக்களை முன்னெடுப்பது, பின்னாட்களில் அவர்களின் நடத்தைகளில் மாத்திரமன்றி, சமூக வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்தவகையில், தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படும் குழந்தையின் எதிர்காலம் பற்றிய தாய்மாரின் எதிர்பார்க்கைகள் பெரும்பாலும் அடையப்பெறக் கூடியவையாகவும் ஆரோக்கியமானவையாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

நவீன சூழலில் குழந்தை வளர்ப்பு பற்றிப் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன. முன்பள்ளிப் பருவத்திலேயே பெற்றோர்கள் தமது கனவுகளைக் குழந்தைகள் மீது திணித்து வருகின்றனர். தங்களது குழந்தைகள் வைத்தியராகவோ அல்லது பொறியிலாளானாகவோ வரவேண்டும் என இருபது வருடங்களுக்கு அப்பால் நடக்கவிருப்பது பற்றி எதிர்பார்த்து, அவைகளின் குழந்தைப் பராய சுயாதீன இயக்கங்களில் இடையூறுகளை ஏற்படுத்துகின்றனர். பின்னாட்களில் இவை பிறழ்வு நடத்தைகளை அவர்களிடத்தில் ஏற்படுத்துகின்றன. எனவே, குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பெற்றோரின் எதிர்பார்க்கைகளும் அதற்கான முன்னெடுப்புக்களும் அவர்களின் நடத்தைகளில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தா வண்ணம் ஆரோக்கியமாக அமையவேண்டும்.

மேற்படி, தாலாட்டுப் பாடல்களில் இடம்பெறக்கூடிய சமய நம்பிக்கை சார்ந்த கருத்துக்கள் தொடர்பில் மற்றுமொரு உளவியல் சார்ந்த செய்தியையும் அறியமுடிகிறது. குறித்த கருத்துக்கள் தாலாட்டில் இடம்பெறும்போது, அவை குழந்தைகளின் மனதில் ஆழமாகப் பதிந்து பின்னாட்களில் நடத்தைகளாக மாறும் சாத்தியங்கள் உள்ளன. ‘‘தாலாட்டில் உள்ள உயர்ந்த கருத்துக்களைப் பொறுத்தமட்டில், அவை தாய் முலைப்பாலே போல், உவப்புடன் அளிக்கப்படுவதால், குழந்தையின் உள்ளத்தின் ஆழத்தில் சென்று தங்குகின்றன. நம் பிற்கால நலனுக்காகச் சேமித்து வைக்கப்படும் நலனே போன்று, அவை குழந்தை வளரும்போது, அதன் குணநல வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகின்றன. நல்ல தாலாட்டுக்களைப் பாடும் வழக்கமிருக்கும் சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் உயர்ந்த பண்புகளையும் கவிதையுள்ளத்தையும் இயல்பாகவே பெற்றிருப்பர்.’’ (சண்முகசுந்தரம், 1991:07)

மேற்படி தாலாட்டுப் பாடல்கள் குறித்து கலந்துரையாடப்பட்ட கருத்துக்கள் வழியாகப் பின்வரும் சில முடிவுகளுக்கு வரமுடியும்:

- பாடல்களில் இடம்பெறும் குழந்தைகள் பற்றிய வர்ணனைகள், தாய்மை எனும் இயல்பூக்கத்தினால் எழும் மனவெழுச்சியாகிய அன்பின் அல்லது பாசத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளன.

- பாடல்களில் இடம்பெறும் உறவுகள் பற்றிய செய்திகள், அன்றைய சூழலில் பெண்கள் பொருளாதாரத் தேவைக்காக ஆணுறவுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையினையும், குழந்தையின் உள்ளங்களில் உறவுகள் மீதான அன்பையும் மரியாதையையும் உண்டு பண்ணும் தாயின் முயற்சியையும் காட்டி நிற்கின்றது.

- ‘மலடி’ எனும் சொற்பிரயோகத்தின் பின்னால் உணரப்படும், அன்றைய சமூக அமைப்பில் பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட கட்புலனாகா வன்முறையும்,

குழந்தைப் பேற்றுக்காக அவர்கள் ஏங்கியதும், காணிக்கை நேர்ந்ததும் போன்ற செய்திகள் அக்காலத்தில் பெண்கள் எதிர்கொண்ட உளவியல் இடர்பாட்டை உணர்த்தி நிற்கின்றன.

- ❖ அழுகைக்கான காரணம் வினவுதல் என்பது குழந்தையை ஆற்றுப்படுத்தும் ஒரு வழிமுறையாக இன்ங்காண முடிவதோடு, அதில் குழந்தை மீதான தாயின் பரிவுணர்ச்சி வெளிப்பட்டு நிற்பதையும் உணர முடிகிறது.

- ❖ தொட்டில், கட்டில் மற்றும் மெத்தை பற்றிய வர்ணனைகள் தாய் தனக்கிருந்த நிகழ்கால வறுமையினை மறக்க அல்லது குறித்த நிகழ்கால யதார்த்தத்திலிருந்து தம்மை விடுவிப்பதற்காக அவள் காணும் பகற்கனவாகக் கொள்ளப்படுகிறது.

- ❖ சமய நம்பிக்கை சார்ந்த கருத்துக்களைக் கூறித் தாலாட்டுவது, குழந்தையின் எதிர்காலம் பற்றிய தாயின் எதிர்பார்க்கையாக அமைவதோடு, எதிர்கால நடத்தை மாற்றங்களை எதிர்பார்த்து, அக்கருத்துக்களைக் குழந்தையின் உள்ளத்தில் ஆழப்பதியச் செய்யும் முயற்சியாகவும் அமைகின்றது.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் பெண்கள் தங்களது மனதிலுள்ள ஆசைகள், பெருமிதங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், மற்றும் கனவுகள் என உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாக தாலாட்டுப் பாடல்கள் அமைந்திருப்பதைக்காணலாம்.

**பயன்பட்ட நூல்கள்**


1. சண்முகசுந்தரம்,சு., (1991), நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

2. சண்முகசுந்தரம்,சு., (2003), தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், சென்னை: காவ்யா பதிப்பகம்.

3. சண்முகசுந்தரம்,சு.,(தொகுப்.), (2000), நாட்டுப்புறவியல்: ஆய்வுக் கோட்பாடுகள், பெங்களஞர்: தன்னானே பதிப்பகம்.

4. சக்திவேல்,சு., (1983), நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை: மாணிக்க வாசகர் பதிப்பகம்.

5. றமீஸ் அப்துல்லாஹ், (2001), கிழக்கிலங்கைக் கிராமியம், கொழும்பு: மல்லிகைப் பந்தல்.

6. மஜீத்,ஏ., (2007), தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல், சாய்ந்தமருது : மருதூர் வெளியீட்டுப்பணிமனை.

7. யோகராசா,செ., (2002), ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, வ.கி.மா: பண்பாட்டுத் திணைக்களம், கல்வி, விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சு.

8. லூர்து,தே., (2000), நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள், பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

9. விசயலட்சுமி,வ., (2005), உளவியல் நோக்கில் நாட்டுப்புறப் பாடல்கள், புதுச்சேரி: வெற்றித் திருமகள் பதிப்பகம்.

10. ஜெமீல்,எஸ்.எச்.எம்., (2008), கிராமத்து இதயம், கொழும்பு : முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

11. Mangal, s.k. (2008). Abnormal Psychology. New Delhi: Sterling Publishers pvt.ltd

***இணையதளங்கள்***

*1. Amelia Hill. (2011.May 08). singing to children may help development of language skills. Retrieved October 08.2018, https://www.theguardian.com/lifeandstyle/2011/may/08/singing-children development-language-skills.*

*2. Expectation. (2015, july 8). Retrieved October 08.2018, from http://www.goodtheraphy.org/blog/psychpedia/expectation.*